R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
August 2021

சகோதரிகளுக்கான
எமது
புதிய வெளியீடு
மகிழ்ந்து களிகூரு
சகோதரி
குளோரி அர்ஜுனன்
அவர்கள் எழுதிய
55 செய்திகள் அடங்கிய
ஒரு
ஆவிக்குரிய புத்தகம்




VOL.1

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**

Every Tuesday 6.00 P.M on Tamilan TV
Every Thursday 6.00 P.M on Heaven TV
Every Saturday 8.00 P.M on Nambikkai TV
YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



love God
love people
be a servant

THE WORD OF CHRIST

Proud to be an indian

Happy Independence Day

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்



மரம் 21 ஆகஸ்ட் 2021 கனி 9

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

MONTHLY THE WORD OF CHRIST

ஆசிரியர்
B. அர்ஜுனன்



HAPPY INDEPENDENCE DAY

15TH AUGUST

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39


பாடம் : 21
தலைப்பு : பயம் – Fear
வேத வாசிப்பு : சங்கீதம் 128:1

1. அவர் தமக்குப் பயந்தவர்களுடைய - சங்.145:19
2. கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் - சங்.மல்.3:16
3. தேவனுக்குப் பயப்படுகிற சிறியோரும் - வெளி.19:5

குடும்பமாக கர்த்தருடைய பணியைச் செய்ய ஒப்புக்கொடுக்கப் பட்டவர்கள் தேவை 6379350509

தேவன் உண்மையுள்ளவர்
அவர் உங்கள் திராணிக்கு மேலாக
நீங்கள் சோதிக்கப்படுவதற்கு
இடங்கொடார்






God is faithful
and He will not
Let you be tested
beyond your strength

**the word of christ** இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் **YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509




**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 252

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. தேசத்தை வேவுபார்க்க கர்த்தரின் தாசனாகிய மோசே யோசுவாவை அனுப்பும்போது யோசுவாவுக்கு வயது என்ன?
2. நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம் என்று சொன்னவர் யார்?
3. கர்த்தரையும், அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியையையும் அறியாதவேறொரு சந்ததி அவர்களுக்குப்பின் எழும்பிற்றா?
4. தேவன் எவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்?
5. நீ எப்பிராத்தாவிலே பாக்கியவனாயிருந்து, பெத்லெகேமிலே புகழ்பெற்றிருக்கக் கடவாய் என்று எவனை வாழ்த்தினார்கள்?
6. மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளா?
7. அநேகம்பேரைக் கொண்டாகிலும், கொஞ்சம்பேரைக் கொண்டாகிலும், ரட்சிக்கக் கர்த்தருக்குத் தடையில்லை என்றவன் யார்?
8. எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன் என்ற அப்போஸ்தலன் யார்?
9. எந்த ராஜாவுடைய ஆண்பிள்ளை கர்த்தர் அடித்ததினால் அது வியாதிப்பட்டுக் கேவலமாயிருந்தது?
10. நாங்கள் ஒரே ஆவியையுடையவர்களாய் ஒரே அடிச்சுவடுகளில் நடந்தோமல்லவா என எழுதும் அப்போஸ்தலன் யார்?

## வேதாகம ஆய்வு... 37 எலிசா - Elisha

1. எலிசா என்றால் கர்த்தர் இரட்சிப்பாய் இருக்கிறார் என்று அர்த்தம்
2. சாப்பாத்தின் குமாரன்
3. சூனேமியாளின் மகனை உயிரடைய செய்தான் – 2இரா4:8–37
4. நாகமானின் குஷ்டரோம் சுகமானது – 2இரா.5:1–14
5. எலிசா மரித்தபின் அவன் கல்லறையில் போடப்பட்டவன் உயிர்த்தெழுந்தான் – 2இரா.13:21



சிறுவர் பகுதி

## மார்த்தாள் - **Martha**

வேத பகுதி: யோவான் 11:1-57



என்ன குட்டீஸ், மார்த்தாள் என்றால் யாருனு தெரியுமா? ம்,ம்.... மரியாள் தான் தெரியும். மார்த்தாள் என்றால் தெரியாதே, என்கிறீர்களா? சரி வாங்க, இவள் யார் எனப் பார்ப்போம். இந்த மரியாள் எனச் சொன்னீங்க அல்லவா, அவளுடைய சகோதரிதான் இந்த மார்த்தாள். இவங்களுக்கு லாசருனு ஒரு சகோதரன் இருந்தான். இவங்க பெத்தானியா என்ற ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தாங்க. நமது இயேசு ஆண்டவர் அடிக்கடி இவங்க வீட்டுக்குப்போவாரு. ஏன் தெரியுமா? இந்த மூன்று பேருக்கும் இயேசுவின் போதனைகளில் கொள்ளை ஆசை. மரியாள் இயேசுவின் பாதத்தண்டையிலே உட்கார்ந்து கொள்வாள். மாத்தாளோ பல வேலைகளைச் செய்து கொண்டிருப்பாள். ஆனாலும் மார்த்தாளுக்கு ஆண்டவருடைய உபதேசம் பற்றி தெரியும்.

ஒரு நாள் என்ன நடந்தது தெரியுமா? லாசரு வியாதிப்பட்டு மரித்துவிட்டான். இதை கேள்விப்பட்ட இயேசு உடனே மாத்தாள் வீட்டுக்குப் போவில்லை. நாலுநாளாயிருச்சு இயேசு அப்போதுதான் அங்கு போகிறார். உடனே மார்த்தாள் என்ன செய்தாள் தெரியுமா? இயேசு வந்துவிட்டார் என்று கேள்விப்பட்டவுடன் இயேசுவினிடத்தில் போய், ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் லாசரு மரித்திருக்க மாட்டான் என்று சொன்னாள். இயேசு கூடவே இருந்தால் எல்லாமே நன்றாகதானே இருக்கும்! அதனால் தான் அப்படிச் சொன்னாள் இது மட்டுமல்ல, இன்னொன்று சொல்லுகிறாள் பாருங்களே, இயேசுவினிடத்தில் வந்து, ".... இப்பொழுது நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள்". எவ்வளவு விசுவாசம் இவளுக்கு! அதற்கு இயேசு என்ன சொன்னாரு தெரியுமா? "உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார்" அதற்கும் அவள், நம்பாமல் உயிர்த்தெழுதல் நாளில் உயிரோடு எழுந்திருப்பான் என்று சொல்லுகிறாள். ஆனால் இயேசுவோ, "...நானே உயிர்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று சொல்லுகிறார். அதுமட்டுமா? லாசருவை எங்கே வைத்தீர்கள் என்று கேட்டு, அவனுடைய கல்லறையினிடத்திற்குப் போய் "லாசருவே வெளியேவா" என்றார். என்ன ஆச்சரியம் நாலுநாள் ஆச்சு, நாறுமே என்று சொன்னவர்களெல்லாம் வாயடைத்துப் போனார்கள். லாசரு இயேசுவின் சத்தத்தைக் கேட்டவுடன் அப்படியே வெளியே வந்தான். பார்த்தீர்களா? இயேசுவுக்கு எவ்வளவு வல்லமை இருக்கிறது. இயேசு சொன்னால் போதும் அப்படியே நடக்கும். ஆம், குட்டீஸ், தேவனால்கூடாதது ஒன்னுமேயில்லை நாமும் மாத்தாளைப்போலில்லாமல் இயேசுவையும் அவருடைய வல்லமையையும் விசுவாசிப்போம். அற்புதம் பெறுவோம்!

**மனப்பாடவசனம்**

**"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" என்றார்**


**யோவான் 11:25**



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 21 ஆகஸ்ட் - 2021 கனி - 9

ஆசிரியருரை

## உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது?
## What About Your Life?



**ஜீவன்** உலகத்தில் உள்ள எல்லாவற்றைப்பார்க்கிலும் விலையேறப்பெற்றது. இந்த ஜீவனைக்குறித்து வேதாகமம் இப்படியாக சொல்லுகிறது; "நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சகாலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே" (யாக்.4:14) என நம்முடைய ஜீவிய நாட்களில் பார்க்கிறோம். கொடி கட்டி பறந்தவர்களுடைய வாழ்க்கை பின்பு சுவடுகள் கூட இல்லாமற்போகிறது. அநேகருடைய வாழ்க்கை இப்படியே போய்விடுகிறது. இதையே வேதம் புகையைப்போலிருக்கிறதே என்று சொல்லுகிறது. ஆகாயத்தில் தோன்றும் புகை சற்றுநேரத்தில் மறைந்துவிடுகிறது. அதைப்போலவே மனிதனுடைய வாழ்க்கையானது இருக்கிறது. எனவே இந்த ஜீவனுள்ள நாட்களை நாம் எப்படி கழிப்பது? என்ற கேள்வி எழும்புகிறது. "நீதியின் பாதையில் ஜீவன் உண்டு; அந்தப் பாதையில் மரணம் இல்லை" (நீதி.12:28). நீங்கள் எந்தப்பாதையை தெரிந்து கொண்டு இருக்கிறீர்கள். ஜீவ பாதையையா? அல்லது மரண பாதையையா? அநேகர் மரணபாதையையே தெரிந்துகொள்ளுகின்றனர். என்றாவது ஒரு நாள் மரிக்கப்போகின்றோம். அது எந்த பாதையாக இருந்தால் என்ன என்று சொல்லி மரணத்தையும் மரணப்பாதையையும் அநேகர் தெரிந்துகொள்ளுகின்றனர். மனிதன் வாழ்வதற்காக படைக்கப்பட்டான் என்பதை அறிந்துகொள்ளுங்கள். மரணம் பிசாசுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் நியமிக்கப்பட்ட ஒன்று. ஆகையால் ஜீவனைத் தெரிந்துகொள்ளுங்கள். நீதியின் பாதை கர்த்தருடைய வழியாக இருக்கிறது. இங்கே மரணம் இல்லை, வருத்தம் இல்லை, அலறுதல் இல்லை. அவரோடு என்றென்றுமாக ஜீவிக்கும்படியாக அழைக்கப்பட்டுள்ளோம்.

ஒரு மனுஷன் "இரண்டாயிரம் வருஷம் பிழைத்திருந்தாலும் ஒரு நன்மையும் காண்பதில்லை; எல்லாரும் ஒரே இடத்துக்குப் போகிறார்கள் அல்லவா? மனுஷன் படும் பிரயாசமெல்லாம் அவன் வாய்க்காகத்தானே; அவன் மனதுக்கோ திருப்தியில்லை" என்று பிரசங்கி 6:6,7 வசனங்களில் வாசிக்கிறோம். ஆம், மனுஷன் படும் பிரயாசம் எல்லாம் அவனுடைய வாய்க்காகத்தான் ஆனால் அவனுடைய மனதுக்கு மனநிறைவு கிடைப்பதில்லை. அதைப்போல அநேக நாட்கள் வாழவேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் உண்டு. அப்படி அநேக வருஷம் உயிரோடிருந்து எந்த நன்மையும் அவர்கள் காண்பதில்லை. மனிதன்

மண்ணிலிருந்து வந்தான் மண்ணுக்கே திரும்புகிறான். இது எல்லோருக்கும் உள்ள நியதியாகவே இருக்கிறது. இதில் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமில்லை எனக் காண்கிறோம். இப்படியிருக்கிறபடியால்; "நிழலைப்போன்ற மாயையான தன் ஜீவகாலத்தைப் போக்கும் மனுஷனுக்கு இந்த ஜீவனில் நன்மை இன்னதென்று அறிந்தவன் யார்? தனக்குப்பின்பு சூரியனுக்குக் கீழே சம்பவிக்குங்காரியம் இன்னதென்று மனுஷக்கு அறிவிப்பவன் யார்?" (பிர.6:12). இன்றைக்கு சேட்லைட் மூலம் பல தகவல்கள் சேகரிக்கப்பட்டு முன்கூட்டியே அறிவிக்கப்படுகிறது. இருந்தபோதிலும் இன்னும் மனுஷனுக்கு முன்கூட்டியே அறியப்படவேண்டிய காரியம் நிறைய உண்டு, ஆனால் அவைகளை அறிவிக்கிறதற்கு ஆட்கள் இல்லை. அதை எவராலும் அறிவிக்க முடியாது என்பதுவே உண்மை. அதையே வேதம் "நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சகாலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே" என்கிறது (யாக்.4:14). நாளைக்கு மனுஷனுக்கு நடப்பதை இன்றுவரை யாரும் அறிவிக்கமுடியாமல் இருக்கிறார்கள். எதிர்காலத்திலும் அதை யாராலும் அறிவிக்கமுடியாது. ஏனென்றால் அதை தேவன் ஒருவரே அறிவார். சிலகாரியங்களை தேவன் மட்டுமே அறியமுடியும். அது மனிதர்களுக்கு எட்டாத ஒன்றாகவே இருக்கிறது. அது அப்படியே இருப்பது நல்லது என்றே நான் சொல்லுவேன். ஒரு குழந்தை பிறந்தவுடன் அனைத்து காரியங்களையும் செய்துவிடுவதில்லை. அது வளர்ந்து வருவதற்கு பல வருடங்கள் எடுத்துக்கொள்ளுகிறது. அதைப்போலவே நாம் தேவனுடைய பார்வையில் குழந்தைகளைப்போலவே உள்ளோம். ஒரு குழந்தை தாய்மடியில் எவ்வளவு பாதுகாப்பாக இருக்கமுடியுமோ அவ்வளவு பாதுகாப்பாக இருக்கும். அதைபோல நாமும் தேவனுடைய சமுகத்தில் இருக்கும்போது பாதுகாப்பாகவே இருப்போம். வளர்ச்சிக்கு மிஞ்சிப்போவோமானால் அழிவுதான் மிஞ்சும். ஆகையால், "நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப்போய், அங்கே தங்கி, வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள்" என்கிறார் யாக்கோபு (யாக்.4:13). நாளைக்கு நடப்பது நமக்கு தெரியாதிருக்கும்போது நம்முடைய கணக்கு எல்லாம் தப்பாகிவிடும். நாளைய தினத்தைக்குறித்து பெருமை கொள்ளாதிருங்கள். கர்த்தருக்குச் சித்தமானால் நாங்கள் இன்னின்னதைச்செய்வோம் என்று சொல்லவேண்டும்.

நீங்கள் கர்த்தருடைய வழியில் அதாவது ஜீவவழியில் இருப்பீர்களானால்; "ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டு மென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன்" என வேதம் ஆலோசனை கொடுக்கிறது (1பேது.3:10,11). ஜீவனைக் காணவேண்டும் என்று விரும்புகிறவன் செய்யவேண்டிய காரியங்கள் நிறைய உண்டு. முதலாவது, பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்க வேண்டும். இதையே சங்கீதக்காரன் பாவிகள் வழியில் நில்லாமலும், பரியாசக்காரன் உட்காரும் இடத்தில் உட்காராமலும் கர்த்தருடைய வேதத்தில் இரவும் பகலும் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்கிறார். நமக்கு நிலையான ஜீவன் வேண்டுமானால் நம்முயை உதடுகளையும் நாவையும் காக்கவேண்டும். அவைகளுக்கு காவல் வைக்கும்படியாக கர்த்தரைநோக்கி மன்றாடவேண்டும். மேலும்,



தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள்" (யோபு 2:9). நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயம் வந்தபோது தன் உடமைகள் எல்லாமே ஜலத்தில் அழிந்துபோயிருக்கும். ஆனால் அவன் மனைவியோ பொருளாசைப்பிடித்தவளாகக் காணப்படவில்லை என்று தான் கருதவேண்டும். அப்படிப் பொருளாசையுடைவளாயிருந்திருப்பாளேயென்றால் நிச்சயம் நோவாவின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து இருக்கமாட்டாள்.

இன்றைய சகோதரிகள் அநேகர் பொருளாசையுடையவர்களாய் யோபுவின் மனைவியைப் போல தன் கணவனை போடா வாடா என்று கூட பேசி விடுகின்றனர். இப்படிப் பேசுவது நிச்சயமாக ஒரு கிறிஸ்தவ ஸ்திரீக்கு அழகல்ல. ஒரு உண்மையுள்ள, வசனத்தைக் கைக்கொள்ளுகிற கிறிஸ்தவள் நிச்சயமாக தன் புருஷனுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையையும், கனத்தையும் செலுத்தியே ஆக வேண்டும். ஏனென்றால் நாம் நம் புருஷர்மார்களுக்கு ஏற்ற துணையாக உண்டாக்கப்பட்டிருக்கிறோம். துணையாக இருப்பவள் அதிகாரியாக மாற முடியாது. எனவே பவுல் ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக் கொள்ளக்கடவள். உபதேசம்பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை..." (1தீமோ.2;11) என்கிறார். ஏனென்றால், "ஆதாம் பிசாசினால் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்" (1தீமோ.2;13) எனவே குற்றஞ் செய்த நாம் மனசாட்சியில் குத்தப்பட்டவர்களாக அடங்கி ஒடுங்கி தம் தம் புருஷருக்குக் கிரீடமாயிருக்க வேண்டும்.

சாராள் என்ற ஸ்திரீயைப் பற்றி கிறிஸ்தவ பெண்கள் நன்கு அறிந்திருப்பார்கள். இவள் தன் புருஷன் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள் (1பேது.3:6). பாருங்கள், அவளுடைய நடக்கையைக் கண்ட தேவன் அவளை எவ்வளவாய் கனப்படுத்தியுள்ளார். அவள் விசுவாசிகளின் தாய் எனக் கருதப்படுகிறாள். உலகிலுள்ள அத்தனை விசுவாசிகளுக்கும் அவள் தாய் என்றால் என்னே பெரிய பாக்கியம் பெற்றுள்ளாள்!

அன்பு சகோதரிகளே! கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாகவே, கிறிஸ்துவையுடையவர்களாகவே இருக்கப் பிரயாசப்படுங்கள். நீ, வா என்று பேசுவதும் போடா, வாடா என்று பேசுவதும் உங்கள் புருஷனுக்கு புகழையும், கிரீடத்தையும் கொண்டுவராது. புறஜாதி ஸ்திரீகள் எப்படி எப்படியோ பேசுவார்கள் அதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டியதில்லை. அவர்களைப் பின்பற்றவும் கூடாது என வேதம் கூறுகிறது. "புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக் கொள்ளாதிருங்கள்" (எரே.10:2). பெண்ணாய் பிறந்தவளே, குணசாலியான ஸ்திரீயாகயிருந்து உன்னுடைய புருஷனுக்கு கிரீடமாகவும், புகழ்ச்சியாகவும் காணப்பட தேவன் தாமே உதவிசெய்வாராக ஆமென்.

பெண்கள் பகுதி

## பெண்ணாய் பிறந்தவளே பகுதி - 2

## Oh! Ye Who Born As A Woman Part - 2

*-Glory Arjunan*



**பெ**ண்ணாக பிறந்துள்ள அன்பு சகோதரியே, உன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாயா? "குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்" என்று நீதிமொழிகள் 12:4 கூறுகிறது. உலக வழக்கில் ஒரு ஆணின் முன்னேற்றத்திற்குப் பின்னால் ஒரு பெண்ணிருக்கிறாள் என்கின்றனர். நீங்கள் உங்களுடைய புருஷருக்கு ஏற்றதுணையாக இருந்து அவருடைய முன்னேற்றத்திற்கு ஊக்கமளிப்பவராக இருக்கிறீர்களா? அல்லது அது உங்களுடைய வேலை உங்களுடைய வேலைக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்கிறீர்களா? நிச்சயமாக ஒரு குணசாலியான ஸ்திரீ புருஷருக்கு புகழ்ச்சியைக் கொண்டுவருவாள். யார் அந்த குணசாலியான ஸ்திரீ? நீதிமொழிகள் 31-ம் அதிகாரத்தில் குணசாலியான ஸ்திரீயைப் பற்றி ஒரு பெரிய பட்டியலே கொடுக்கப்பட்டுள்ளது.

குணசாலியான ஸ்திரீயின் விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது அவள் தன் புருஷனையும் தன் வீட்டாரையும் தன் வேலைக்காரர்களையும் நன்கு கவனிக்கிறாள். எனவே அவள் வருங்காலத்தைப் பற்றி கவலை கொள்ளாமல் மகிழ்கிறாள். ஆனால் இன்றைய சகோதரிகள் நாளைய தினத்தைக் குறித்து கவலைப்படுகின்றனர். அதிலும் பெண்குழந்தைகள் பிறந்துவிட்டால் அவ்வளவு தான்! வசனம் கூறுகிறது "பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்" (சங்,127:4) என்று. இப்படியிருக்க கர்த்தர் உங்கள் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளமாட்டாரா? அவர் வருங்காலத்திற்கும் தேவனாயிருக்கிறார். ஒரு குணசாலியான ஸ்திரீ ஒன்றுக்கும் கவலைப்படாமல் தன் புருஷனுக்கும் தன் வீட்டாரனைவருக்கும் ஏற்ற தன் கடமைகளைச் செய்தால் நிச்சயம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாள். அவளுடைய குடும்பமும் ஆசீர்வதிக்கப்படும். ஸ்திரீகள் செய்யவேண்டுவதெல்லாம் சிறுவயதிலேயே தன் பிள்ளைகளுக்குக் கர்த்தருடைய கற்பனைகளையும், கட்டளைகளையும் கற்றுக் கொடுக்கவேண்டும்.

பாருங்கள்! நோவா காலத்தில் நோவாவின் மனைவி தன் புருஷன் நோவாவிற்குக் கீழ்ப்படிந்திருந்ததுமட்டும்மல்லாது தன் பிள்ளைகள் மூவரும் தன் மருமக்கள் மூவரும் கீழ்ப்படிந்திருந்தபடியினால் ஜலத்தின் அழிவிற்கு தப்பிக் காக்கப்பட்டார்கள். மேலும் பேழையை விட்டு இறங்கியதும் கர்த்தருக்கு ஒரு பலிபீடம் அமைத்து நன்றி செலுத்தினார்கள். நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். ஆனால் யோபுவின் மனைவியோ பொருளாசை பிடித்தவளாக அத்தனையும் இழந்துவிட்டோமே எனக்கருதி யோபுவை பார்த்து: "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ?



பொல்லாப்பைவிட்டு விலகி, நன்மைசெய்து சமாதானத்தை தேட வேண்டும் எனக் காண்கிறோம். சமாதான கர்த்தரைப் பின்பற்றுவோமானால் நமக்கும் சமாதானம் கிடைக்கும். மற்றவர்களுக்கும் சமாதானத்தை உண்டுபண்ணுவோம். இவைகளையெல்லாம் தேடாமல் தன் ஆத்துமாவுக்காகவே வாழ்ந்து கொண்டிருந்த ஒரு மதிகேடனைப்பற்றி நாம் வேதத்தில் படிக்கிறோம். அவன்; "ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப் பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்" (லூக்.12:19,20). இன்றைக்கு அநேகர் தங்களுக்காகவே அநேக பொருட்களை சேர்த்துவைத்துக்கொண்டு வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். தேவனுடைய உபதேசங்களையும், அவருடைய ஆலோசனைகளையும் தள்ளிவிட்டு, தாங்கள் நிரந்தரமாக இந்தப்பூமியில் இருப்பதைப்போல அநேக பொருட்களை தங்களுக்காகவே குவித்துவைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை என்னவாகும்? இந்த ஐசுவரியவானின் நிலைமையைப் போலாகிவிடும். அதில் எந்தவிதமான மாற்றமுமில்லை.

நீ எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறாய்? நீ ஜீவனுள்ள வாழ்வை காணவேண்டுமென்று விரும்புவாயானால், ஆண்டவர் இயேசுவின் மாதிரியின்படியே நீ நன்மைசெய்வதில் சோர்ந்துபோகாமல் வாழ்ந்து உன் ஜீவனை தப்பவைத்துக்கொள்ள உன் ஜீவனுள்ள நாளெல்லாம் ஜீவனுள்ள வசனங்களுக்குச் செவிகொடு. அப்பொழுது உன் வழிகளை கர்த்தர் வாய்க்கப்பண்ணுவார். நாளைக்கு நடப்பது நமக்கு தெரியாதிருக்கிறபடியால் நாம் நாளைய தினத்தைக்குறித்து பேசும்போதும் திட்டமிடும்போதும் கர்த்தருக்குச்சித்தமானால் என்ற ஒரு வார்த்தையை பயன்படுத்த வேண்டும். இது பிதாவாகிய தேவனுக்கு ஏற்ற ஒரு வார்த்தையாக இருக்கிறது. அவரை மகிமைப்படுத்துகிற ஒன்றாக இருக்கிறது. இதையே யாக்கோபு சொல்லுகிறார்; "ஆதலால்; ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்கள் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்" (யாக்.4:15). இப்படிச் சொல்லும்போது நாம் செய்ய நினைப்பது கைகூடிவரும். இதை தவிர்த்துவிட்டு, நிச்சயமாக நாளைக்கு அல்லது ஒரு நாள் நான் அதை செய்வேன் என்று சொல்வீர்களேயானால் நீங்கள் தேவனுடைய நியமத்திற்கு எதிராக இருக்கிறீர்கள். ஆதலால் தேவன் உங்களுடைய காரியங்களை வாய்க்கச்செய்யமாட்டார் என்பதை அறிந்துகொள்ளுங்கள். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்" என யோவான் சொல்லுகிறார் (1யோவா.5:14). நாம் எதையாகிலும் கேட்பதற்கு முன்னமே அவைகள் தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றதா என்பதை நாம் முதலாவது எண்ணிப்பார்க்கவேண்டும். சிலர் எதைக் கேட்டாலும் கர்த்தர் கொடுப்பார் என்று எண்ணிக்கொண்டு தகாத விதமாக முறையிடுவார்கள். அப்படிப்பட்டவர்களுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

ஆகையால் பேதுரு நமக்கு கொடுக்கும் ஆலோசனை என்னவென்றால்; "தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு

ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்" என்கிறார் (1பேது.4:19). உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரம் முழுவதுமாக பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள். உங்களில் சுயம் ஆள இடம்மளிக்காதிருங்கள். கிறிஸ்து உங்களை முழுவதுமாக ஆண்டுகொள்ள, கிருபையுள்ள வசனத்திற்கு ஒப்புக்கொடுங்கள். நம்முடைய ஆண்டவர்; பிதாவாகிய தேவனுக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கும்போது; "பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்" (லூக்.22:42). ஆண்டவரின் ஜெபத்தை கேட்டீர்களா? உங்களுடைய ஜெபம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? சகல அதிகாரத்தையும் பிதாவின் கரத்தினில் பெற்ற ஆண்டவர், அதை தன்னுடைய நாட்களில் தன் சித்தத்தின்படி பயன்படுத்தும்படியாக விரும்பாமல் பிதாவின் விருப்பத்திற்கே தன்னை முழுவதுமாக அர்ப்பணிக்கிறதைக் காண்கிறோம். தேவன், சில பாடுகளை நாம் அநுபவிக்கும்படியாக ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவைகளை நாம் அநுபவித்தே ஆகவேண்டும். ஐயோ, என்னால் இதை சகிக்க முடியவில்லையே என்று ஓலமிடுவதைக் காட்டிலும் அதை நான் சகிக்க எனக்குப் பெலத்தைத் தாரும் பிதாவே என்று தேவனை நோக்கி ஜெபிக்கக்கற்றுக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யும்போது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாக இருப்போம்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் சகோதரனே, சகோதரியே உங்களுடைய ஜீவன் எப்படிப்பட்டது? அந்த ஜீவனை பிதாவாகிய தேவனிடத்திலிருந்து நீங்கள் பெற்றீர்கள் என்பதை அறிவீர்களா? அந்த ஜீவன் தப்ப, அந்த ஜீவன் காக்கப்பட அவருடைய வசனத்திற்குச் செவிகொடுங்கள். அப்பொழுது அந்த ஜீவனைப் பாதுகாத்துக்கொள்வீர்கள். உலகத்தில் உள்ள எல்லாம் அழிந்துபோகும். ஆனால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஜீவன் அழிந்துபோகாது. அதை உங்களுக்குக் கொடுத்தவர் அழிவில்லாதவர். அவர் நித்தியமானவர், சர்வ வியாபி, சர்வத்தையும் தன்னில் கொண்டவர். அவருக்கு உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள்.

**வசனங்கள் ஒருவனை உயிர்ப்பிக்குமா?**

வசனங்கள் வெறும் காகிதத்தில் தானே அச்சிடப்பட்டிருக்கிறது என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அதை எடுத்து ஒரு மனிதனுடைய இருதயத்தில் விதைக்கும்போது அது உயிரடைகிறது. எப்படி ஒரு விதை இருக்கிறதோ அதைப்போலவே வசனமும் இருக்கிறது. விதை வெளியிலிருக்கும்போது அது விதையாகவே இருக்கிறது. அதை எடுத்து நிலத்தில் விதைக்கும்போது அது உயிரடைந்து வளர்ந்து மரமாகிறது. வசனமும் மனிதனுடைய இருதயத்தில் விதைக்கும்போது அதை அவன் பெற்று பெலனடைகிறான். மரணத்திற்கு அவனுடைய கால்களை விலக்கி பாதுகாத்துக்கொள்ளுகிறான். "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" (யோவா.6:63). ஆவிக்குரியவன் இந்த ஆவிக்குரிய வசனங்களுக்குச் செவிகொடுப்பான். மற்றவர்கள் இதை அசட்டைபண்ணுவார்கள். இதினால் ஆவிக்குரியவர்கள் இன்னார் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். நீங்கள் தேவனால் உண்டாக்கப்பட்டவர்களாக ஆவிக்குரியவர்களாக இருப்பீர்களானால் இவ்வசனங்களுக்குச் செவி கொடுத்து, உங்களை பாவத்திலிருந்து மீட்டு உயிர்ப்பிக்கும் இவ்வசனங்களுக்குச் செவிகொடுத்து உயிரடையுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



# கேள்வியும் வசன ரீதியான பதிலும்

1. **எது சத்தியம்?** - தேவனுடைய வசனமே சத்தியம் - (யோவான்17:17)
2. **ராஜரீக பிரமாணம் எது?** - உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக - (யாக்கோபு2:8)
3. **தேவன் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் எது?** - நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் - (1யோவான்2:25)
4. **கிறிஸ்துவின் பிரமாணத்தை எப்படி நிறைவேற்ற முடியும்?** - ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து - (கலாத்தியர்6:2)
5. **அன்பை எப்படி நாம் அறிந்துகொண்டோம்?** - அவர் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்துகொண்டோம் - (1யோவான்3:16)
6. **எது அன்பு?** - நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு - (2யோவான்6)
7. **பிதாவையும் குமாரனையும் உடையவன் யார்?** - கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் - (2யோவான்9)
8. **எது நித்திய ஜீவன்?** - ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் - (யோவான் 17:3)
9. **முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு என்னபேர்வழங்கிற்று?** - கிறிஸ்தவர்கள் - (அப்போஸ்தலர்11:26)
10. **நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் யாருக்கே க சொல்லுகிறது?** - நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம் - (ரோமர்3:19)




*நீங்கள் இவ்விதழின் வாசகரா?*

*அப்படியானால் உங்களுடைய பங்கு என்ன?*

- உங்கள் நண்பர்களுக்கும் இவ்விதழ்கிடைக்க அவர்களது முகவரி அனுப்பலாம்.
- வாசகர்களை தெரிந்து கொண்டு அவர்களுக்கு சந்தா செலுத்தலாம்.
- உங்கள் பகுதியில் சபையாக கூடி இச்செய்திகளை வாசித்துக்காட்டலாம்.
- இவ்விதழின் ஆசிரியரை அழைத்து சுவிசேஷ கூட்டங்கள் நடத்தலாம்.
- இவ்விதழின் வளர்ச்சிக்காக ஜெபிக்கலாம்.
- உங்களுடைய கருத்துக்களை அவ்வப்போது தெரியப்படுத்தலாம்.
- மாதம் ஒரு முறை அலுவலகத்திற்கு வந்து உதவிடலாம்.

9443558041 / 6379350509

விக்கப்படுகிறோம்? “... கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப் பட்டோம்” (ரோம.6:3,4).

நீங்கள் உங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்க அல்லது இரட்சிப்பிற்காக தேவன் எதிர்பார்க்கிறதைப் பற்றிய உங்கள் அறியாமையை சார்ந்திருக்க தீர்மானித்திருப்பீர்களானால், திரும்பிச் சென்று இக்கேள்வியை மறு ஆய்வு செய்யுங்கள். இழந்த நிலையில் தொடர்ந்திருப்பதைத் தெரிந்து கொள்ளாதீர்கள்.

*அன்புள்ள சகோதரர் B.அர்ஜுனன் அவர்களுக்கு. நலம் நலமறிய ஆவல். நான் பூக்கடையில் வேலை பார்த்து வருகிறேன் போதுமான வருமானம் கிடையாது, வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். பயம், பரபரப்பு, தடுமாற்றம், நடுக்கம் வந்து விடுகிறது. எனக்கு 42 வயதாகிறது திருமணமாகவில்லை. திசை மாறிய பறவையாக இருக்கிறேன். எனக்காக ஜெபியுங்கள். டி.வி நிகழ்ச்சியை பார்த்து தங்களிடம் போனில் புத்தகத்தை கேட்டேன். மேலும் மாதாந்திர பத்திரிக்கை அனுப்பி வைக்கும்படிக்கு கேட்டுக் கொள்கிறேன்.*

## வாசகர் கடிதம்...



*இப்படிக்கு,*
*மு.கணேசன்*

# நான் யார்?



- என் சகோதரன் லாசரு
- நான் பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்தேன்
- எனது ஊர் பெத்தானியா
- நான் இயேசுவை தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசித்தேன்
- இயேசு கல்லை எடுத்துப்போடுங்கள் என்று சொல்லும்போது நாறுமே என்றேன்
- இயேசுவுக்கு இராவிருந்து பண்ணும்போது நான் பணிவிடைசெய்தேன்
- என் சகோதரி மரியாள்

## ஜெபியுங்கள்



- நமது மாத இதழ் துவங்கி 29 வருடங்கள் முடிந்து விட்டது அதற்காக...
- ஆகஸ்ட் 15 சுதந்திரதின நாள் அதற்காக...
- நம் நாட்டில் உள்ள அனைவரும் சுதந்திரமாக வாழ...
- நம் நாட்டின் ஒன்றுமைக்காக...
- பெருகிவரும் கொள்ளை, கொலைச் சம்பவங்கள் கட்டுப்படுத்தப்பட...
- நாளுக்கு நாள் பெருகிவரும் பாலியல் சம்வங்கள் முடிவுக்குவர...
- கர்த்தருக்குப் பயப்படும் பயம் உலகமெங்கும் எழும்ப...



## நாம் ஏன் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்கிறோம்
## Why We Partake of The Lord`s Supper
*-J.C.Choate*



இயேசுவும் அப்போஸ்தலரும் மேல் வீட்டறையில் பஸ்காவில் பங்குகொள்ளும்படி கூடியிருக்கையில் கர்த்தருடைய பந்தியானது இறுதி விருந்தை நினைவுபடுத்துகிறது. பஸ்கா என்பது ஆட்டுக்குட்டியின் இரத்தம் எந்தெந்த வீட்டின் நிலைக்கால்களில் தெளிக்கப்பட்டிருந்ததோ அதனைக் கண்டு மரணதூதன் கடந்து சென்றதை நினைவுப்படுத்தும்படி கொண்டாடும் ஒரு வருடாந்திரப்பண்டிகையாகும் (யாத்.12). இந்தப்பண்டிகை ஒழிந்துபோனது, ஆனால் புதியஏற்பாட்டின் வருகையினால், கர்த்தருடைய ஜனங்கள் இப்போது கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளுகின்றனர்.

வேதவாக்கியம், “அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புதுஉடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்” (மத்.26:26-30) என்று கூறுகிறது.

மாற்கு புத்தகத்தில் நாம், “அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக்கொடுத்தார். அவர்களெல்லாரும் அதிலே பானம்பண்ணினார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம் பண்ணும் நாள்வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனிநான் பானம் பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்” (மாற்.14:22-26) என்று வாசிக்கிறோம்.

கடைசியாக, லூக்கா இதே விதமாகக் குறிப்பிடுகிறது, “வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும்

ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி; நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைத் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து; இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்'' (லூக்.22:14-20)

கர்த்தருடைய பந்தி ஏற்படுத்தப்படுவது பற்றிய இந்த மூன்று பதில்களில், நாம் கவனிக்க வேண்டிய அநேகக் காரியங்கள் உள்ளன. முதலாவது, முன்பு குறிப்பிடப்பட்டுள்ளபடி, இயேசு சீஷர்களுக்கு இரவு விருந்திற்கு அறிமுகப்படுத்தும்படி பஸ்காவிருந்தினை ஏற்படுத்துவதற்குக் காரணம் அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு அது கைக்கொள்ளப்படுமென ஒரு இரவு விருந்தை அல்லது ஒரு நினைவு விருந்தை பயன்படுத்தினார். அவர், அப்பம் அவருடைய சரீரமாயிருக்கிறது அல்லது அவருடைய சரீரத்துக்கு மாதிரியாயிருக்கிறது என்றும் அது தம்மையும் தம்முடைய பாடுகளையும் நினைவுகூரும்படிக்கு பங்கெடுக்கப்படவேண்டியது என்றும் சொன்னார். பாத்திரம், அதாவது திராட்சப்பழரசம் தம்முடைய இரத்தமாகவும் அதாவது தம்முடைய இரத்தத்திற்கு மாதிரியாயிருக்கிறதென்றும் மனுஷனுடைய பாவங்களின் மன்னிப்புக்கென்று சிந்தப்பட்ட இரத்தமாயிருக்கிறது என்றும் அந்த இரத்தத்தை நினைவுகூரும்படிக்கு அது பங்குகொள்ளப்பட வேண்டியதாயிருக்கிறது என்றும் சொன்னார். நிச்சயமாக, இந்த வேதவாக்கியங்களில் அவர் பேசுகின்ற இந்த அப்பமானது, இந்த இராப்போஜனத்தில் பங்குகொண்ட போதிலும்கூட, இது கிறிஸ்துவினுடைய நேரடியான சரீரமாயிராது. பாத்திரமானாலும், அதாவது பழரசம் அல்லது திராட்ச ரசமானாலும், கிறிஸ்துவினுடைய நேரடியான இரத்தமாயிராது. ஆனால் அவைகள் வெறுமனே மாதிரியாக அல்லது கிறிஸ்துவின் சரீரம் மற்றும் அவருடைய இரத்தமாக கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளுகிறவர்கள் நினைவுகூருகிற ஒன்றாக இருக்கும். இந்த பஸ்காவானது புளிப்பில்லா அப்பமும் திராட்சப் பழரசமும் சேர்ந்தது எனக் குறிப்பிடுகிறதாயிருக்கவேண்டும்.

கிறிஸ்துவும் அப்போஸ்தலரும் பஸ்காவைப் புசித்தபடியினாலும் அதே சமயம் தம்முடைய இராப்போஜனத்தை ஏற்படுத்த அவர் அப்பத்தையும் பாத்திரத்தையும் பயன்படுத்தியபடியினால், இன்னும்கூட கர்த்தருடைய பந்தியில் நாம் பங்குகொள்ளுகையில், நாம் புளிப்பில்லாத அப்பத்தையும், திராட்சப்பழம் அல்லது திராட்சப்பழ ரசத்தையும் கர்த்தருடைய சரீரத்தையும் கர்த்தருடைய இரத்தத்தையும் நினைவுகூரும்படிக்கு பயன்படுத்துகிறோம். இரண்டாவது, இயேசு அவர்களோடுகூட தேவனுடைய ராஜ்யத்தில் இது நிறைவேறுமளவும் இந்தப் பஸ்காவைப் புசிப்பதில்லை என்று தம்முடைய சீஷர்களிடம் சொன்னார். இது கிறிஸ்து சீக்கிரமாக காட்டிக்கொடுக்கப்படப்போகிறார் என்றும் இவ்வாறாக உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் இரத்தஞ்சிந்தப் போகிறார் என்றும்



முடியாது ரோம.3:10,23, ''அந்தப்படியே, நீதிமான் ஒருவனாகிலும் இல்லை,.....எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி'',எனக் கூறுகிறது. ஏசாயா59:1,2-ல், ''இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது'' என வாசிக்கிறோம்.

மனிதன் முதிர்ச்சியடைந்து பாவத்தைத் தெரிந்துகொள்ளும் போது, அந்தப் பாவங்கள் அவனுக்கும் தேவனுக்குமிடையே ஒரு சுவர் போலாகி பிரிவினையை உண்டாக்குகிறது. நாம் நம்மை பாவமற்றவர்களாக மாற்றமுடியாது; ஆனபடியினால் நாம் நம்மை மீண்டும் தேவனுடைய பிரசன்னத்திற்குள் கொண்டுவர முடியாதவர்களாக இருக்கிறோம். நாம் பயிற்சிக்கிற ''நற்குணம்'' எதுவாயினும் நம்முடைய பாவத்தினால் கறைப்படுத்தப்பட்டதாய் நம்முடைய வாழ்வில் எப்போதும் தோற்றமளிக்கிறது.

இதற்குப் பரிகாரம் என்ன?

நாம் 1பேது.2:21-25-ல்''இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் நமக்காகப் பாடுபட்டு, நாம் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி மாதிரியைப் பின் வைத்துப்போனார். 'அவர் பாவஞ்செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை'(ஏசா.53:9). அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார்; நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார் அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (ஏசா.53:5). சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும்கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்''என வாசிக்கிறோம்.

மேலும் 2கொரி.5:21, ''நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்'' என விளக்குகிறது. ஆனால் நாம் பாவிகளாகயிருப்பதினால், நாம் மீண்டும் ஒரு முறைகூட வல்லமையுள்ள தேவனுடைய பிரசன்னத்திற்குள் வரும்படிக்கும் நம்முடைய பாவங்கள் நீங்கி அவருடைய நீதிக்குள்ளாக நாம் இரட்சிப்பின் வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படிக்கும் நாம் ஒரு இரட்சகரைக் கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும். நாம் அறிந்திருக்கிறபடி, நம்முடைய பாவங்களை நீக்கும் படிக்கு இயேசு கிறிஸ்து தாமே தம்முடைய சரீரத்தில் அவைகளை சிலுவையின் மேல் சுமந்தார். ''நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று...'' ரோம.6:6 விளக்குகிறது.

எப்பொழுது மற்றும் எவ்வழியில் நாம் பாவத்திற்கு மரித்து தேவனுக்கு முன்பாக புது சிருஷ்டியாக மாறி, அவருடைய குமாரனின் நீதிக்குள்ளாக உடுத்து

பெண்கள் பகுதி

# நல்லவராய் இருப்பதே நன்று

## Being "Good" Is Enough

*-Betty*



**எ**ல்லா சமயமும் அடிப்படையில் ஒரே மாதிரியானவையாக இல்லையா? ஒரு மனிதன் நேர்மையாகவும் உண்மையாகவும், ஒரு சிறந்த அண்டைவீட்டானாகவும், ஒரு சிறந்த மனிதனாகவுமிருக்க முயற்சிக் கிறவனாகவும் இருந்தாலே தேவன் அவனை ஏற்றுக்கொள்ளுவார் என அனைத்து சமயங்களும் போதிக்க வில்லையா?

அநேகமாக, ஜனங்கள் தனிப்பட்ட விதத்தில் உள்ள நற்குணமே தேவனை திருப்தி செய்ய போதுமானது என நம்புவதையே விரும்புகின்றனர். மேலும் அவர்கள் இது குறித்து தேவன் என்ன கூறுகிறார் என்பதை கண்டுகொள்ளும்படி அவருடைய வார்த்தையை படிக்கின்றதை தவிர்ப்பதையே தெரிந்து கொள்ளுகின்றனர், ஆனால் மாறாக, தங்களை இரட்சித்துக்கொள்ளும்படிக்கு தங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்கின்றார்கள். எப்படியோ, தேவன் அவர்களிடத்தில் அதிகமானதை எதிர்பார்த்தாலும் கூட, அவர் அதிகம் எதிர்பார்க்கிறார், அவருக்குக் கீழ்படியும்படிக்கு தங்களுடைய வீழ்ந்துபோன நிலையை மன்னிப்பார் என்று அவர்கள் அறியாதவர்களாகவே இருக்கின்றனர். பிடிவாதமான அறிவீனம் தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கின்றதா? தனிப்பட்ட விதத்திலான நற்குணம் போதுமானதா? “உண்மையாகவே, இந்த "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்; மேலும் ஒரு நாளைக் குறித்திருத்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே ....”(அப்.17:30,31).

இந்த வசனம், நியாயத்தீர்ப்பின் நாளிலே தேவன் நம்மை என்ன கேட்டுக் கொண்டாரே, அதைக் குறித்த நம்முடைய அறியாமைக்காக நம்மை மன்னிக்க மாட்டார் எனத் தெளிவாகக் கூறுகிறது. நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், நாம் கண்டிப்பாக அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவர் கட்டளையிட்டிருப்பதை அவருடைய வார்த்தையின் மூலம் அவர் நமக்குக் கற்பிக்கட்டும்.

நாம் அறியாதிருப்போமானால், நாம் அவருக்குக் கீழ்படியமுடியாது. ஆகவே நாம் கற்றுக் கொள்ளுகிறதான இந்த காரியம் ஒரு கட்டளையாகும். இதை இயேசு, “என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்”(யோவா.12:48) என எச்சரித்தார். நாம் அவருடைய எச்சரிப்பைக் கவனிக்க வேண்டும்: அறியாமை நம்மை இரட்சிக்காது!

ஆனால் நாம் நம்முடைய சுயநீதியான ஜீவியத்தினால் இரட்சிப்படைய



வெளிப்படுகிறது. அதன்பின் அவர் அடக்கம் செய்யப்பட்டு மூன்று நாட்களுக்குப் பிறகு கல்லறையிலிருந்து புறப்பட்டு சீஷர்களுக்கும் மற்றவர்களுக்கும் சில நாட்களுக்குக் காட்சியளித்து அதன்பிற்பாடு பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்திற்கு திரும்பிச்சென்றார். தேவனுடைய ராஜ்யம் அல்லது சபை எருசலேமிலே ஸ்தாபிக்கப்பட்டு அங்கிருந்து அது உலகமுழுவதும் பரவும். தயவுகூர்ந்து கவனியுங்கள் ஏற்றவேளையில் சபை ஸ்தாபிக்கப்பட்டபிறகு “அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்” (அப்.2:42) என வாசிக்கிறோம். அப்பம்பிட்குதல் இங்கே கர்த்தருடைய இராப்போஜனத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் வரப்போகிற ராஜ்யம் அல்லது சபையில் சீஷர்கள் பந்தியில் பங்குகொள்கையில் கிறிஸ்து அவர்களோடு இருப்பாரென வாக்குப்பண்ணினார். நிச்சயமாக, அவர் சரீரத்தில் அவர்களோடுகூட இருக்கப்போவதாக பொருள்படுத்தவில்லை, ஆனால் அவர்களோடுகூட இருந்தார்

மேலும் அவர் ஆவியில் தம்முடைய பிள்ளைகளோடுகூட இன்றும் இருக்கிறார். எங்கே இரண்டு அல்லது மூன்று பேர்கள் தம்முடைய நாமத்தில் கூடுகிறார்களோ அங்கே அவர்களோடுகூட தாம் இருப்பேன் என்று அவர் சொன்னார் (மத்.18:20). மீண்டும், அவர் எப்பொழுதும், அதாவது மரணபரியந்தமும்கூட நம்மோடே இருக்கப் போவதாக வாக்குப் பண்ணியிருக்கிறார் (மத்.28:20). ஆனபடியினால், சபை நிலைத்திருக்கிறது, கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் கர்த்தருடைய பந்தியில் பங்குகொண்டு, அதிலே நிலைத்திருக்கையில், அவர் நம்மோடுகூட இருக்கிறார்.

இப்போது என்னோடுகூட 1கொரிந்தியர்11:23-29-க்குத் திரும்பி, அப்போஸ்தலர் பவுலின் வார்த்தைகளை வாசிப்போம், அவர் சொன்னபோது, “நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கெண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச்செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப்பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் **கர்த்தருடைய**, அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், **கர்த்தருடைய** சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால் தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்” என்றார்.

தொடர்ந்து பார்க்கையில், நாம் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய சில காரியங்கள் உள்ளன. முதலாவது, பவுல் கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பற்றிய தகவலை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டிருப்பதாக வெளிப்படுத்தியிருக்கிறான். இரண்டாவது அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தை நினைவுகூரும்படிக்கு அப்பத்திலும், புதிய உடன்படிக்கையை அல்லது கிறிஸ்துவின் சட்டத்தை உறுதிப்படுத்தும்படிக்கு சிந்தப்பட்ட இரத்தமாகிய கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவுகூரும்படிக்குப் பாத்திரத்திலும் பங்கெடுக்க வேண்டியவர்கள் என அவர் சொன்னார். மூன்றாவது அவர்கள் பந்தியில் தொடர்ந்து பங்கெடுக்க வேண்டியவர்களாக அதாவது கிறிஸ்து வரும்வரை அவரது மரணத்தை நினைவுகூரும் வண்ணமாக இருக்கவேண்டுமெனவும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் எவ்வாறு தொடர்ந்து பங்கெடுப்பது? அப்போஸ்தலர் 20:7-ல் அப்பம் பிட்கும்படி துரோவாவில் காத்திருந்த கிறிஸ்தவர்களோடு பவுல் கூடி வந்ததை நாம் உதாரணமாக பெற்றிருக்கிறோம். எத்தனை முறை வாரத்தின் முதல் நாள் வருகிறது? ஒருவாரத்திற்கு ஒரு முறை அதாவது கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வாரத்தின் முதல் நாளிலே கூடிவரவேண்டியவர்களாயிருந்தார்கள். அவ்வாறே இன்றும் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்களென்பது உண்மை. நாம் வியாழக்கிழமையில், மாதம் ஒரு முறை, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, இன்னும் இதுபோன்ற வேறு நாட்களில் கூடிவரும்படியான உரிமை பெற்றிருக்கவில்லை. மாறாக, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளும்படி வாரத்தின் முதல் நாள் கூடிவந்தார்களென அறிவுறுத்தப்படுகிறோம். மேலும் ஒவ்வொருவாரத்திலும் ஒரே ஒரு முதல் நாளே இருந்தபடியால் கிறிஸ்துவை நினைவுகூரும் நோக்கத்திற்காக கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளும்படி அவர்கள் அந்நாளிலே தான் கூடிவந்தார்கள். நாம் அவர்களுடைய மாதிரியைப் பின்பற்றுகிறவர்களாயிருந்தால் இன்னும் அதே காரியம் பின்பற்றப்படவேண்டும்.

தொடர்ச்சியாக நான்காவது, கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்கையில் நாம் இரட்சிக்கப்படும்படிக்கும் நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையைக் கொண்டிருக்கும் படிக்கும் கிறிஸ்து ஏற்படுத்திய தியாகத்தை நினைவுகூர சிலுவைக்கு நேராக திரும்புகிறோம். நாம் அப்பத்தைப் பிட்கையில் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டுள்ளோமென அறிவித்துக் கொண்டும், அதனால் நாம் அவர் எப்போது மீண்டும் வருவார் என்பதையும் அறிவுறுத்திக் கொண்டுமிருக்கிறோம்

ஐந்தாவதாக: நாம் இந்தப் பந்தியில் அபாத்திரமாய் பங்கெடுத்தால் நாம் கர்த்தரிடத்தில் விசுவாசம் கொண்டிருக்கவில்லையென்றும் நாம் செய்கிறவற்றில் உண்மையுள்ளவர்களாயிருக்கவில்லையென்றும் கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் தகாதவிதமாக பயன்படுத்தி குற்றமுள்ளவர்களாகவும் இருக்கிறோம் என்பதை நாம் கண்டிப்பாக நினைவுகூரவேண்டும். இதை இன்னொரு விதத்தில் சொன்னால், கர்த்தருடைய பந்தியில் அபாத்திரமாக பங்குகொள்வது நமக்கு நாமே ஆக்கினைத் தீர்ப்புவரும்படி புசிக்கிறோம் குடிக்கிறோம் என்று அர்த்தமாகிறது. ஆனால் கர்த்தருடைய பந்தி நமக்கோ கர்த்தருக்கோ ஏதாவது பொருள்படுத்துமானால் அது நாம் கர்த்தரிடத்தில் கண்டிப்பாக விசுவாசமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்றே பொருள்படுத்துகிறது.



அவசியம் உணர்ந்து இருக்கவேண்டும். அங்கே நிச்சயமாக மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் தவிர வேறெந்த அதிகாரம் செலுத்தும் உத்தியோகஸ்தர்களோ ஸ்தானங்களோ உருவாக்கப்பட வேண்டாம். எந்த பிரசங்கியாரும் சபை ஆளுகை செய்கிறதிலே மூப்பர்களின் பணியை எடுத்துக் கொள்ளும்படி வகை தேட வேண்டாம். ஆனால் ஒவ்வொரு நபரும் தேவனுடைய ஊழிய ஸ்தானங்களை அறிந்து உணர்ந்திருக்கக் கடவர். பின் ஒவ்வொரு மனிதரும் சரியாக நன்கு தகுதிவாய்ந்தவர்களாக சரியாக செய்யக் கடவர்கள்.

**கேள்விகள்**

1. 1தீமோ.3:1 சொல்கிறது ஒரு கண்காணியின் அலுவல் ஒரு நல்ல ------------------------.
2. சபையிலுள்ள இரண்டு அலுவர்கள் யார்? யார்? (பிலி.1:1) --------- மற்றும் -----------.
3. எபி.13:17 சொல்கிறது மூப்பர்கள் --------------- ஆக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாயிருக்கிறார்கள் என்று.
4. "உதவிக்காரர்" என்ற வார்த்தை ஒரு ---------- என்பதை குறிப்பிடுகிறது.
5. 2தீமோ.4:5 சொல்கிறது தீமோத்தேயு ஒரு --------------- ----------------- செய்யவேண்டியதாய் இருக்கிறது என்று.
6. யார் சபையை கண்காணிப்பு செய்கிறவர்களாய் இருக்கிறார்கள்? (1பேது.5:2,3).
7. சபையிலுள்ள அலுவலர்கள் பனை வேலை செய்கிற வேலையாட்களுக்கு ஒப்பாக இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் அவரவருடைய சொந்த --------------- -------.
8. 1தீமோ.3:13 ஒரு உதவிக்காரருடைய ---------- குறித்து பேசுகிறது.
9. முதலாவது உதவிக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதைக் குறித்து எந்த அதிகாரம் பேசுகிறது?
10. ஒரு சுவிசேஷகர் மூப்பர்களின் மேற்பார்வைக்கு கீழ்ப்பட்டவராயிருக்கிறாரா?

**நடப்புச் செய்திகள்**

❒ தென் கொரியாவிலுள்ள சீயோலில் வருடத்திற்கு ஆயிரத்திற்கு மேல் 30-40 வயதிற்கு உட்பட்டவர்கள் தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள். ஏன் இப்படிச் செய்கிறார்கள் என அந்நாட்டு அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

❒ இந்தியாவில் திருநங்கைகள் எண்ணிக்கை 20 லட்சத்திற்குமேல் இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.



**தெரிந்து கொள்ளுவோம்** *- K.R.K.Ravi Asir*

**பிரஸ்ஸல்ஸ் (பெல்ஜியம்)**

சென்னே நதியோரம் சதுப்பு நிலத்தில் உருவான நகரமாகும். ஃபிளேமிஷ் மொழியில் பிராஸ் என்றால் 'சேறு' என்று அர்த்தம். லஸி என்றால் 'கட்டடம்' என்று அர்த்தம். இந்த இரு சொற்களிலிருந்து உருவான பெயரே பிரஸ்ஸல்ஸ் ஆகும்.

கண்காணிகளாயிருக்கிறார்கள் (அப்.20:28).

**2. உதவிக்காரர்கள்:** உதவிக்காரர்கள் சபையில் வேலையாட்களாயிருக்கிறார்கள். உதவிக்காரர் என்ற வார்த்தை "வேலை செய்கிற ஒருவர்" என்பதை குறிப்பிடுகிறது. எல்லா கிறிஸ்தவர்களும் தாழ்மை உள்ள வேலையாட்களாக இருந்த போதிலும் உதவிக்காரர்கள் விசேஷமாக சபையின் தேவைகளுக்காக வேலை செய்யும்படி நன்கு தகுதிபடைத்தவர்களாயிருக்கிறார்கள். எருசலேம் சபையிலே தேவையுள்ள அங்கத்தினர்களை பந்தி விசாரிக்க போஷிக்கப்படுவதை மேற்பார்வை செய்ய மனுஷர்கள் தேவைப்பட்டார்கள். இந்த வேலையானது முதலாவதாக உதவிக்காரர்களுக்கு அளிக்கப்பட்டது (அப்.6:1-6). உதவிக்காரரின் தகுதிகள் அவர்கள் நல்லொழுக்கம் உள்ளவர்களாகவும் வைராக்கியம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது. அவர்களுடைய ஜீவியத்தினாலும், பிரயாசத்தினாலும், அவர்கள் சபையிலே மரியாதையுள்ள மனுஷராய் இருக்கிறார்கள் (1தீமோ.3:8-13). மூப்பர்கள் தங்களுடைய வேலையின் பகுதியை உடையவர்களாக இருக்கிறதுபோல, உதவிக்காரர்களும் சபையிலே தங்களுடைய வேலையின் பகுதியை உடையவர்களாயிருக்கிறார்கள். இதுவே "ஒரு உதவிக்காரரின் அலுவல் என்பதன் பொருளாக இருக்கிறது" (1தீமோ.3:13). மூப்பர்களும் உதவிக்காரர்களும் மட்டுமே வேதாகமத்தின்படி ஒரு ஸ்தானம் அல்லது அலுவல் உடையவர்களாக இருக்கிறார்கள். இன்னும் பல ஸ்தானங்கள் அல்லது வேலையாட்கள் வேத வாக்கியங்களிலிருந்து கேட்கப்பட்டாத வகையில் நாமகரண சபைகளில் காணப்படுகின்றன. பிலப்பியர் 1:1 வசனத்தில் பவுல் கண்காணிகள் (மூப்பர்கள்) மற்றும் உதவிக்காரர்களுடனே கூடிய பிலிப்பி பட்டணத்தில் இருக்கிற சபைக்கு பவுல் எழுதுகிறார் மூப்பர்களும், உதவிக்காரர்களும் கர்த்தருடைய சபையிலே அலுவலர்களாக இருக்கிறார்கள்.

**3. சுவிசேஷகர்கள்:** ஒரு சுவிசேஷகன் என்பவர் சபையிலே ஒரு அலுவலர் அல்லது அதிகாரி அல்ல, ஆனால் அவர் ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்ய வேண்டியதாயிருக்கிறது. பவுல் தீமோத்தேயுவுக்கு ஒரு சுவிசேஷகனுடைய வேலையைச் செய்யும்படி கூறினார் (2தீமோ.4:5) ஒரு சுவிசேஷகன் ஒரு பிரசங்கியராக இருக்கிறார். அவருடைய வேலையின் விசேஷமான பகுதி பிரசங்கிப்பதிலும், போதிப்பதிலும் இருக்கிறது. பிலிப்பி பட்டணத்திலிருந்த சபையிலே மூப்பர்களும் உதவிக்காரர்களும் இருந்த போதிலும் (வச.1) தீமோத்தேயு ஒரு சுவிசேஷகனுடைய வேலையைச் செய்யும்படி பவுலினால் அனுப்பப்பட்டார், இது செய்யப்பட வேண்டியதாயிருந்தது (பிலி.2:19). மற்ற எல்லா அங்கத்தினர்களைப்போலவே சுவிசேஷகர்களும் மூப்பர்களின் மேற்பார்வைக்கு கீழ்ப்பட்டவர்களாயிருக்கிறார்கள். மூப்பர்களுக்கு கீழாக பணியாற்றும் ஒரு பிரசங்கியார் மூப்பர்களுக்காக பெரும்மரியாதை கொண்டவராக இருக்க வேண்டும் (1தீமோ.5:17). ஆனால் ஒரு பிரசங்கியாரின் அதிகாரம் மூப்பர்களுடைய வார்த்தையாக அல்ல, ஆனால் அது தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. ஒழுங்கற்று நடக்கிற ஒரு மூப்பர் தேவைப்படும் பொழுது மற்றவர்களுக்கு பயம் உண்டாகும்படி கடிந்து கொள்ளப்படவும் வேண்டியதாயிருக்கிறது (1தீமோ.5:19-20). தேவன் சுவிசேஷர்களுக்கென்று ஒரு ஸ்தானத்தையும், மூப்பர்களுக்கென்று ஒரு ஸ்தானத்தையும் சபையிலே வைத்திருக்கிறார். அவர்கள் ஒவ்வொருவரும் நன்கு தகுதி வாய்ந்தவர்களாகவும், ஒவ்வொருவரும் தன்னுடைய பணிக்கு ஆயத்தமானவராகவும் இருக்கவேண்டும். ஒவ்வொருவரும் தேவன் அவரவர் செய்யும்படி சித்தம் கொண்டிருக்கிற பணியைச் செய்யத்தக்கதாக பொறுப்பின் தன்மையை அறிந்திருக்க வேண்டியது மிக அவசியமானதாக இருக்கிறது. இதே விதமாக பிராந்திய சபைகளும் அந்த மனுஷர்கள் செய்யும்படி இருக்கிற பணியை



மேலும் கடைசியாக, ஆறாவது கட்டத்தில், நாம் தேவனுக்கு முன்பாக நம் இருதயமும் ஜீவியமும் நீதியுள்ளதாக இருக்கிறது என்ற நிச்சயமுள்ளவராக இருக்க கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்வதற்கு முன் நம்மை நாமே நிதானித்து பார்க்க உற்சாகப்படுத்தப்படுகிறோம். நாம் கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருக்கிறோம் என நம்மால் முடிந்த அளவு சிறப்பானதைச் செய்கிறோம் என்று அறியும் போது மட்டும் நாம் அதில் பங்குகொள்ள வேண்டும். நாம் அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறோமென கர்த்தர் நம்மில் எதிர்பார்க்கிறவற்றைச் சார்ந்து நம்முடைய இருதயத்தில் நேர்மையுடன் அறிக்கைசெய்ய முடியாவிட்டால், பிறகு கர்த்தருடைய ஜனங்களோடு வாரந்தோறும் அப்பம் பிட்கத் தொடரும்முன் நாம் நம்முடைய பாவங்களுக்காக மனந்திரும்பி நம்மைக் கர்த்தர் மன்னிக்கும்படி கேட்க வேண்டும்.

என்னுடைய நண்பரே; கர்த்தருடைய பந்தியானது கர்த்தருடைய சபையில் அங்கமாயிருக்கிற ஒரு கிறிஸ்தவனுக்கு மிகவும் முக்கியமானது. இது கிறிஸ்துவை நினைவு கூர்ந்து அவருக்கு உண்மையுள்ளவராய் நிலைத்திருக்க வேண்டும் எனப் பொருள்படுத்துகிறது. இது ஒரு போஜனத்தைப்போல புசிப்பதற்கு அல்லது இதன் நோக்கத்தினை புரிந்துகொள்ளாமல் பங்குகொள்வதற்கு இது வெளித்தோற்றத்திற்கு உள்ளானதல்ல. இது கிறிஸ்தவனை பெலப்படுத்துவதற்கும் அதே சமயம் கர்த்தருடைய பந்தியின் மூலம் கிறிஸ்துவினிடத்திற்கு மற்றவர்களைத் திருப்புவதற்கு அவனுக்கு ஒரு வாய்ப்பளிப்பதற்கும் இது கடைபிடிக்கப்படுகிறது.

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? கர்த்தருடைய பந்தி உங்களுக்கு என்னத்தைத் தெரியப்படுத்துகிறது? வாரத்தின் ஒவ்வொருநாளும் கர்த்தருடைய பிள்ளைகளோடு அப்பம் பிட்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிராவிட்டால், நீங்கள் கிறிஸ்தவராய்மாறும்படிக்கு உங்களை ஊக்கப்படுத்த விரும்புகிறோம். கிறிஸ்துவை விசுவாசித்து உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவிலுள்ள உங்களுடைய நம்பிக்கையை அறிக்கையிடுவதின் மூலமும் உங்களுடைய பாவங்களின் மன்னிப்புகென்று தண்ணீரில் அடக்கம்பண்ணப்பட்டு ஞானஸ்நானம் எடுத்துக்கொள்வதின் மூலமும் (மாற்16:16; அப்.2:38) நீங்கள் கிறிஸ்தவராய் மாறமுடியும். நீங்கள் இதைச் செய்யும்போது கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார். ஒரு கிறிஸ்தவனாக, கர்த்தருடைய குடும்பத்தின் ஒரு அங்கத்தினனாக, நீங்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய பந்தியைப் புசிக்கலாம், நீங்கள் கிறிஸ்தவ ஜீவியம் செய்வதால், இவ்வாறாக கிறிஸ்துவிலுள்ள உங்களுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டு, கிறிஸ்துவிலுள்ள உங்களுடைய நம்பிக்கையை உலகத்திற்கு பிரஸ்தாபப்படுத்துங்கள்.




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*
*63793 50509*

**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**



***தற்சோதனை பகுதி - 35***


**35. பரிசுத்த ஆவியானவரின் வேலை என்ன?**

1. சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் ☐ வசன ஆதாரம் -
2. உலகத்தைக் கண்டித்து உணர்த்தமாட்டார் ☐ வசன ஆதாரம் -
3. நான் (இயேசு) உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் ☐ வசன ஆதாரம்-------------------------------------------
4. அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருக்க மாட்டார் ☐ வசன ஆதாரம் -------------------------------------------
5. விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள் ☐ வசன ஆதாரம்----------
6. தேவவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்படவில்லை ☐ வசன ஆதாரம் ----------------------------------------------------
7. தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம் ☐ வசன ஆதாரம்-
8. தேவனுடைய ஆவியை ஒருவனும் அறியான் ☐ வசன ஆதாரம்-
9. தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள் ☐ வசன ஆதாரம் ------------------------------------------------------------------
10. பரிசுத்த ஆவிக்கு விரோதமாக பேசினால் அது மறுமையில் மன்னிக்கப்படும் ☐ வசன ஆதாரம் ----------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள் வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம். இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**






## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் - 16**

**சபையிலுள்ள பணிநிலைகள் என்னென்ன?**

**வரைகுறிப்பு**

**1. மூப்பர்கள்**

**2. உதவிக்காரர்கள்**

**3. சுவிசேஷகர்கள்**

**கலந்துரையாடல்**

**1. மூப்பர்கள்:** சபையை வழிநடத்துகிறர்களாய் செயல்படும் வேலையின் விஸ்தீரணத்தைக் குறித்து நாம் படிக்க இப்பொழுது ஆயத்தமாக இருக்கிறோம். தயவு செய்து முதலாவது "அலுவல்" என்ற வார்த்தையின் பொருளை புரிந்து கொள்ளுங்கள். 1தீமோ.3:1 "கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்" என்று சொல்லுகிறது. ஒரு பணி என்பதன் பொருள் ஒரு சபையில் உள்ள ஒரு வேலை என்று பொள்படுகிறது. சபையிலுள்ள ஒரு பணி என்பது பொறுப்பு அல்லது பணியின் ஒரு நிலையை காட்டுகிறது. அநேக ஜனங்கள் கர்த்தருடைய சபையிலுள்ள அலுவலர்களை அரசாங்கத்திலுள்ள சில அலுவலர்களைப் போன்று எண்ணுகிறார்கள். அவர்களுக்கென்று ஒரு சாய்வு மேஜையும் அலுவலகமும் இருக்கிறதென்றும், அவர்கள் மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை மட்டும் சொல்கிறார்கள் என்றும் நினைக் கிறார்கள் அரசாங்கத்தில் உள்ளதைப் போன்று பணி. மற்றும் அநேக அலுவலகங்கள் தேசங்களிலே அசுத்தப்படுத்தப்பட்டவைகாயிருக்கின்றன. அலுவலகங்களை வைத்திருப்பவர்கள் சுயமான பணத்தை தாங்கள் உடையவர்களாயிருக்கும்படி லஞ்சங்களை அளித்திருக்கிறார்கள். அவர்களுடைய நிலையானது அவர்களுக்கு வேலையில் இருந்து தப்பித்துக் கொள்ள ஒரு வழியாக இருக்கிறது. அவர்கள் தங்களுடைய பணியை பெரும் கனத்தோடு கூடிய ஒர உயர்ந்த நிலையில் சிறிதளவே வேலையுள்ளது என்று எண்ணுகிறார்கள்.

கர்த்தருடைய சபையிலுள்ள அலுவலர்கள் பனை எண்ணெய் (பாமாயில்) தயாரிக்கும் வேலை செய்கிற வேலையாட்களுடன் ஒப்பிடப்பட முடியும். ஒரு மனிதருக்கு மரத்தில் ஏறி பழங்களை வெட்டும் வேலை இருக்கிறது. ஒரு பெண்ணுக்கு பனம் பழங்களை எடுத்துச் சேகரிக்கும் பணி இருக்கலாம். பின் மற்றொரு மனிதர் அதை அரைத்து கூழாக்கி எண்ணெய்யை தயார் செய்யும் பொறுப்புடையவராக இருக்கலாம். அனைவருமே அவசியமாக தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் வாஞ்சையோடு பணியாற்ற வேண்டும். இவ்விதமாக மூப்பர்கள் செய்ய வேண்டிய ஒரு பணி இருக்கிறது, உதவிக்காரர்கள் செய்ய வேண்டிய ஒரு பணி இருக்கிறது. சுவிசேஷகர்களுக்கென்று அவர்களுடைய சொந்த பொறுப்பு இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் நிறைவேற்றும்படியான பணி இடம் ஒன்று இருக்கிறது. ஒவ்வொருவரும் செய்யும்படியாக ஒரு குறிப்பிட்ட பணி இருக்கிறது. இது தான் அவருடைய அலுவலுக்கான பொருளாக (அர்த்தமாக) இருக்கிறது. இது அவருடைய வேலை அல்லது செய்யவேண்டிய பணி வகையாக இருக்கிறது. சபையிலுள்ள மூப்பர்களுக்கு மேற்பார்வை செய்யும் பொறுப்பு இருக்கிறது (1பேது.5:2). அவர்கள் கண்காணிகளாக இருக்கிறார்கள் (அப்.20:28). அவர்கள் அங்கத்தினர்களின் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறார்கள் (எபி.13:17). அவர்கள் மந்தையின் ஆவிக்குரிய